ஆசிரியர் : கோரநாதன்

★

# எப்படி உருப்படும்?

★

விலை : நாலணா

# எப்படி உருப்படும்?

கோரநாதன்

வெளியிடுவோர் :
எம். சூரி
14-ஏ, குப்பையர் தெரு
மின்ட் பில்டிங் P. O.
ஜி. டி. சென்னை

முதற்பதிப்பு
ஜனவரி, 1948

விலை : நான்கணு

# எப்படி உருப்படும்?

## 1

தமிழ் சினிமா உருப்படுமா என்று கேட்கிறார்கள்.

தமிழ் சினிமா ஆரம்பமான காலத்திலிருந்தே எழுகிற கேள்வி இது. முன்பு கேட்டார்கள்... இன்று கேட்கிறார்கள்... இனியும் கேட்டுக்கொண்டே யிருப்பார்கள், தமிழ்ப் படம் உருப்படுமா என்று!

தமிழ் சினிமா வளர்ந்துவந்துள்ள சுவட்டை-வளர்ந்து வருகிற பிரதாபத்தை— விழிப்புடன் ஆராய்ந்தவர்கள் எவரும் சுலபமாகச் சொல்லக்கூடிய ஒரே பதில் 'உருப்படாது'! என்பதே.

ஆமாம். தமிழ்ப் படக்கலை இதே ரீதியில் போனால் உருப்படாது. உருப்படவே உருப்படாது என்று அழுத்தமாகக் கூறலாம்.

கிர பாரம்பரையிலே வந்த விமர்சகர்கள் எழுதிக் கொண்டே யிருக்கலாம். கலையின் அருமை பக்தர்கள் அலறலாம். ஆனாலும், இன்றுள்ள பட முதலாளிகளும், சினிமா பிரம்மாக்களும் ஸ்டுடியோ பூமியை விட்டு அப்புறப்படுத்தப்பட்டால் ஒழிய, தமிழ் சினிமாக்கலை வளரப் போவதில்லை.

ஏன்?

## 2

அன்றாடத் தாள்கள் பலவற்றிலும் அபாரமான விளம்பரங்கள் பல வர்ணங்களில் மிளிர்கின்றன. மாதப்

பத்திரிகைகள், மாதமிருமுறைகள், சுவரொட்டிகள் எங்கும் எப்போதும் நம் கண்களை உறுத்துகின்றன வெளிவந்த படங்கள் பற்றி — வெளிவரப்போகிற படங்கள் பற்றி— எல்லாம் விளம்பரங்கள்.

அவற்றின் மூலம் நாம் அறிவதென்ன? பழைய குப்பைக் கதைகளை படாடோபப் படங்களாக உருவாகின்றன— உருவாக்கப்படுகின்றன. இந்தப் பாடாவதிக் கதைகளைக் கூட போட்டி போட்டுச் சுட்டுத் தள்ளுகிறார்கள் பட முதலாளிகள்.

திரும்பத் திரும்ப வள்ளிகளும், கிருஷ்ணாலீலைகளும் வந்த ஸீசன் ஓய்ந்துள்ளது. பார்த்தார்கள் பட முதலாளிகள். ஆழ்வார்கள், நாயன்மார்கள் கதைப் பொட்டலங்கள் தீர்ந்துவிட்டன. ஆகவே, 'அடியைப் பிடியடா பாரத பட்டா' என்று 'அரிமீயான் அரி, அண்ணை வீட்டிலே பொரி' என்கிற கதைக்குத் திரும்பியிருக்கிறார்கள்!

இலக்கிய மறுமலர்ச்சி என்கிற பெயராக சில எழுத்தாளர்கள் பழம் பாடாவதிப் புராணப் புளுகுகளை அடிப்படையாக்கி புது வார்னிஷ் பூசி கலைப்பணி புரிவதுபோல, பட முதலாளிகள் முன்பே சுடப்பட்ட கதைகளை மீண்டும் படம் பிடிக்கத் துணிந்துள்ளார்கள். சினிமா மறுமலர்ச்சி சீஸனில் பாமா விஜயம், தூக்குத் தூக்கி, காளிதாஸ், அபிமன்யூ, கிருஷ்ண விஜயம், வத்ஸலா கல்யாணம் எல்லாம் முளைக்கின்றன.

வழக்கம்போல் தலைப்பு மாற்று வியாபாரம் ஜரூராகத் தான் நடக்கிறது. காளிதாஸ் 'ராஜமுக்தி' யாகிறது. பாமா விஜயம் 'பாரிஜாதம்' ஆகப்போகிறது. இப்படிப் பல தில்மால்கள்!

ஒரு படம் கொஞ்சம் வெற்றிகரமாக ஓடிவிட்டதா? உடனே அதே சுவட்டில் பல காளான்கள் முளைக்கும். ஒரு பெயருக்கு மௌஸ் ஏற்பட்டுவிட்டதா? அந்த சாயலில் ஆயிரம் பெயர்கள் ஒலிக்கும். இந்த மனோபாவம் காரணமாக சினிமா உலகம் 'வல்லி'களும், 'மாலா'க் களும் மண்டிய காடாகி வருகிறது. ஆரவல்லி, சூரவல்லி, காமவல்லி, வசந்தவல்லி, சண்பகவல்லி... ஆர்யமாலா, ரத்னமாலா வகையராக்கள்!

இப்படி இரவல் மூளைகளும், 'ஈயடிச்சான் காப்பி' களும், மாரீசங்களும்தான் சினிமா மார்க்கெட்டிலே போஷிக்கப்படுகின்றன. எத்திப் பிழைக்க விரும்புகிறவர் கள் எந்தக் குப்பையையாவது அழகான லேபிள் ஒட்டி விற்றுவிடத் தவிக்கிறார்கள். குஜிலிக்கடைப் பதிப்புகள் சிலவற்றை பளபளக்கும் ஸெலபோன் பேப்பரில் அடைத்து ஒட்டி சுலபமாக இளிச்சவாயன் தலையிலே கட்டுவார்களே சில புத்தக வியாபாரிகள், அந்த தினுசிலேதான் சினிமா வியாபாரமும் வளர்கிறது!

லாபம் வருமோ, நஷ்டம் வருமோ என்று பயந்துக் கொண்டிருக்க விரும்பாமல், நிச்சய வெற்றி பெறச் சுலப மான வழி கண்டுபிடித்துவிட்டார்கள் தமிழ்ப்பட முதலாளி கள். என்ன? பத்தாம் பசலி அத்தைப் பாட்டிக் கதை கள் அஞ்சாறைச் சேர்த்து முடித்துப்போட்டு, ஸ்டண்டுகள் இந்திர தந்திர மந்திர ஜால வேடிக்கைகள் கூட்டி இஷ்டம் போல் நீளம் நீளமாகப் படம் பிடித்தால் கும்பல் கூடும் என்பது புதிய பாடம்!

மீண்டும் மீண்டும் சிவனார் வந்து வந்து போகிறார். நாரதரும், தேவலோகச் சாமிகளும் ஆசாமிகளும் தோன்றி மறைந்து அபத்த விளையாட்டுகளைப் புரிகிறார்கள்.

புராணப் புளுகுகளை கோளாறுன கற்பனையோடு புது மெருகு தீட்டிக் கதையாக்கி படம் பிடித்து கச்சா பிலிமை யும், மனித உழைப்பையும், செல்வத்தையும், நாட்டு மக்களின் காலத்தையும் காசையும் கரியாக்குகிறார்கள் பண ஆசை பற்றிய வீணர்கள். பலரகமான கீழ்த்தர ஆசைகளும் வெறியும் பிடித்தவர்கள் படவுலகில் ஏராளமாக இருப்பதால், தமிழ் சினிமாக்கலை பாழடைந்தே வருகிறது.

சாதாரண மக்களின் அறியாமையை மூலதனமாக்கி தாம் பிழைக்க சுலபமான முறையில் வியாபாரம் பண்ணுகிற பிஸினஸ் வாலாக்கள்தான் இன்றையப் படமுதலாளிகள். கலை வளரவேண்டும், நாட்டுக்கு நல்லன புரியவேண்டும், மக்களின் பண்பாட்டை உயர்த்தவேணும் என்பதெல்லாம் இவர்கள் நோக்கமல்ல. இவர்களுக்கு வேண்டியது பணம்... படாடோப வாழ்க்கை... போக வாழ்வு. செலவு செய்கிற பணத்தை விட அதிகமான லாபம் வருகிறது அதோடு ரக ரகமான 'உருப்படி'களையும் 'நட்சத்திர'ங்களையும் இஷ்டம்போல் பயன்படுத்திக் கொள்ளலாம் என்கிற வெறி நினைப்பு, மன அரிப்பு முதலியவைகளால் உந்தப்பட்டு தொழிலில் ஈடுபட்டவர்களே சினிமா உலகில் அதிகம் காணப்படுகிறார்கள்.

குரங்கு கையில் பூமாலை அகப்பட்டதுபோல, இத்தகையவர்களிடம் உயர்ந்த, சிறந்த சக்திவாய்ந்த, கலை சிக்கிக்கொண்டு சீரழிகிறது!

## 3

படமுதலாளிகள் விரும்புவது பாடாவதிக் கதைகளையே. அதற்கு அவர்கள் கூறுகிற காரணம் பொது மக்கள் அத்தகைய கதைகளையே வரவேற்கிறார்கள் என்பதே!

புராணப் பித்தலாட்டங்களையும், அத்தைப்பாட்டி அளப்புகளையும் படம் பிடிக்க முனைகிறார்கள்—தொலைந்து போகட்டும்! செய்வதை உருப்படியாகச் செய்கிறார்களா என்று பார்த்தால், அபத்தக் களஞ்சியமாகவும், பேத்தல் படங்களாகவுமே உள்ளன.

' இப்படித்தான் உருவாகின்றன வெற்றி தரும் படங்கள் ' என்று பீத்தல் பெருமைக்கு அடிப்படையாக உள்ள ' கன்னிகா ' வையோ, அபார வெற்றி என்று பிரமாதப் படுத்தப்படுகிற ' ஆயிரம் தலைவாங்கி அபூர்வ சிந்தாமணி ' யையோ, அல்லது வேறு எந்தக் ' கந்திரிப் பட ' த்தையோ பார்த்தால், தானகவே தெரியும் சினிமா பிரம்மாக்களின் பேதமையும் பித்தலாட்டங்களும்.

பரமசிவன் தோன்றி கை நீட்டுவார். மண்ணிலிருந்து குபுக்கெனக் கிளம்புவான் ஒரு மகன் — முழுதும் வளர்ந்த ஆணழகன்.

திடீரெனக் கையை நீட்டுவார் சாமி. குடிசைகள், மாடுகள் பிறக்கும். வரம்பெற்ற ஆசாமி அந்தரத்திலே பறக்கவும், சித்து விளையாடல்கள் புரியவும் வல்லவனக இருப்பான். ஆனல் சின்னஞ் சிறு காரியத்தைச் சாதிக்க முடியாமல் திண்டாடுவான் !

என்? படமுதலாளி, கதை எழுதுகிறவர், டைரக்டர் முதலியவர்களது சிந்தனசக்தி மழுங்கிவிட்டது தவிர வேறு எதுதான் காரணமாக இருக்க முடியும் ?

ஒரு சிறு உதாரணம். ' கன்னிகா ' வில், பழிஞனின் ' உயிர்நிலை ' யான பறவையை எடுத்துவர பறவை வாகனத்தின் மீதேறி கடல் கடந்து போகிறுன் கதாநாயகன். அங்கே பாதாள அறையில் பாதையூடே உள்ள பெருந்

யைக் கடக்க முடியவில்லை. தூரத்தில் நின்றபடியே கை நீட்டுகிறான். கூண்டு தானாக வருகிறது, பறவையை அவன் எடுத்துக்கொள்ள வசதி செய்து!

இதைப் பார்க்கும்போது, இப்படி கை நீட்டி, கூண்டை வரச்செய்யும் சக்தி பெற்றவன் ஏன் கடல் கடந்து வரவேண்டும்? இருந்த இடத்திலிருந்தே மந்திரத்தால் வரவழைத்து விடலாமே என்ற இயல்பான ஐயம் எழுகிறது.

எடுத்துவிடும்படி அமைக்கலாம் தான்! அப்படிச் செய்துவிட்டால், படப் பிரம்மாக்கள் தங்கள் (டெக்னிக்கு களையும் டிரிக்குகளையும்) 'கலை உத்தி' களையும் தந்திர வித்தைகளையும் திணிக்க முடியாமல் போய்விடுமே!

அதற்காக, மடத்தனமான கற்பனைகள் வளர்க்கபடுகின்றன சினிமாவிலே! கதையைப் பற்றியோ, கதை நடந்த காலத்தைப் பற்றியோ, கலையைப் பற்றியோ படந் தயாரிப்பவர்களுக்குக் கவலையில்லை. தங்களுக்குத் தெரிந்ததையெல்லாம், தங்கள் கையில் அகப்பட்டவற்றை — தாங்கள் நல்லது என மதிப்பவற்றை — படத்திலே புகுத்திவிட வேண்டும் என்கிற தவிப்பு பல விபரீதங்களுக்கு இடமளிக்கிறது. அர்த்தம் இருந்தாலும் சரி, அனர்த்தம் விளைவித்தாலும் சரி — அதனால் என்ன! நினைத்ததைப் படத்தில் புகுத்திவிட வேண்டும். அதுதான் முக்கியம்!

இத்தகைய விபரீத ஆசைகளின் விளைவுகள்தான் புராணப் படங்களிலே நவநாகரிக மங்கையரின் நிர்வாண நாட்டியங்கள்! இந்த நாட்டியங்களைப் புகுத்த கதை நெளிந்து கொடுத்தாகவேண்டும்! ஆங்கிலோ இந்தியப் பெண்களின் நாட்டியத்தைத் திணிப்பதற்காக 'சகுந்தலை'

கதையில் வனதேவதைகளின் அவசியம் ஏற்பட்டதல்லவா! ஆசிரமத்தைப் பிரிந்து போகும் சகுந்தலையை வழியனுப்ப நீர்மோகினி, நிலமோகினி, மரமோகினிகள் 'ஸ்விம்மிங் டிரஸ்' அணிந்து நீட்டி நெளித்து வந்தனவாம்! ஏன்? டைரக்டருக்கு 'வேண்டிய' மூன்று ஆங்கிலோ இந்தியப் பெண்களுக்கு 'சான்ஸ்' கொடுப்பதற்காக!

'கன்னிகா' வில் சர்ப்ப நாட்டியம் ஆடுகிறாளே, அவள் வித்தையைப் படத்தில் புகுத்த கதையில் ஒட்டு வேலைகள் செய்ய வேண்டியிருக்கிறது!

இது போல் எவ்வளவோ! படமுதலாளிகள் அல்லது டைரக்டர்களின் அன்பையோ, அபிமானத்தையோ பெற்றுவிட்டவர்களுக்கு இடமளிக்கவும் கற்பனைக் கோளாறுகள் தலைகாட்டும்!

## 4

மடத்தனத்தின் அவதாரங்களான 'பணமூட்டை'கள் ......படுபாடாவதிக் கதைகள்—இவற்றுக்குச் சரியான துணையாகத் திகழும் டம்பாச்சாரி டைரக்டர்கள் கதாசிரியர்கள் டெக்னீஷியர்கள்! இவர்களுக்கு ஏற்ற நடிக சிகாமணிகள்! — இந்த கும்பல்களை நம்பி வாழ்கிறது — வாழவேண்டியிருக்கிறது—சினிமா.

திறமை வேண்டும் என்பதில்லை. வெளிச்சம்போட்டு அலையத் தெரியவேண்டும், பணம் போட்டவரின் நல்லெண்ணத்தை எந்த வகையிலும் சம்பாரிக்கத் தயாராக இருக்கவேண்டும்!—முன்னேறிவிடலாம்!

தமிழ்ப் படவுலகில் தேர்ந்த, திறமைமிக்க, நடிகர் ஒருவரேனும் உண்டா? கிடையாது. நட்சத்திர நடிகையரில் அழகி யாரேனும் உண்டா? கிடையவே கிடையாது.

திறமையும் அழகும் உலவாத இடத்திலே கலை எப்படிச் செழிக்கும்? களைதான்—காளான்தான்—தலை தூக்க முடியும்!

இன்றைய சினிமா உலகில் மாமிச பிண்டங்கள், சதை மூட்டைகள், 'குட்டைச் சுரைக்காய், பொத்த பூசனிக்காய், வதகப் புடலங்காய்' என்றெல்லாம் கேலி பேசுவார்களே, அந்த இனத்துக்குரிய உருபடிகள்தான் நடமாடுகின்றன. சட்டுப்பொசுக்கினாலும் நடிப்பின் சாயைகூடப் படியாத — படிய முடியாத — 'திருப்பூர் பருப்பு மூட்டை'களும், புளிமூட்டைகளும், உதியமரக் கட்டைகளும்தான் நடிகர்கள்! நடிப்பு என்றால் என்னவென்றே தெரியாத சாமர்த்தியசாலிகள் நடிக்கவந்துவிட்டார்கள் நட்சத்திரம் என்று பட்டம் சூடிக்கொண்டு! குதிப்பது கூப்பாடு போடுவது — இவைபே நடிப்பு என நம்புகிற பிரகஸ்பதிகள் ஏராளம்!

நெஞ்சை 'விடாய்த்துக்' கொண்டு நடப்பவர்கள்... அலங்காரச் சாத்திரங்கள்...நாடக மேடையிலே கத்திக் கத்திப் பழகி, கதறுவது அன்றி வேறறியாப் பராபரங்கள்......ஒரு படத்தில் தலைகாட்டிய உடனேயே 'ரொம்ப உயர்ந்த ஜந்து' என்று நம்பி அகந்தையோடு அலைபவர்கள்......ஆண்களை அலட்சியமாகக் கருதி ஜம்பமாகத் திரியும் அலங்காரிகள் — இப்படி எவ்வளவோ ரகங்கள்!

நடிப்பு, கதா பாத்திரம், கதை நிலை முதலியவைகளைப் பற்றி எண்ணி உணர்ந்து, திறமையாக நடிக்கவேண்டும்

என்கிற ஆசை நமது நடிகர்களிடம் இருப்பதாகத் தெரியவில்லை. பணம் மட்டும் ஏராளமாகப் பெறத் தவிக்கிறார்கள். அதிகமாகப் பணம் சம்பாதிக்கவேண்டும் என்ற ஆசையால், ஏக காலத்தில் பல படங்களில் நடிக்கத் துடித்து ஒரு படத்திலாவது நல்ல பேர் எடுக்க முடியாமல் நாசமாகி, படத்தையும் நாசமாக்குகிறார்கள்.

பட முதலாளிகளும் திறமையோ, கதைக்கு ஏற்ற நடிகர்களையோ தேடிப் பிடிப்பதில்லை. அவர்கள் தேடி ஓடுவதெல்லாம் பெயர் பெற்றுவிட்ட பிரபல நட்சத்திரங்களைத்தான். அந்த நட்சத்திரக் குஞ்சுகள் ஏவ்வளவு பெருந்தொகை கேட்டாலும் கொட்டியழத் தயாராக இருக்கிறார்கள் அதே வேளையிலே, சிறிய நடிகர்களை ஏமாற்ற விரும்புகிறார்கள்.

பெரிய நடிகர்களோ பணம் வாங்கிக்கொண்டு 'ஓப் பேத்துகிறார்'களே தவிர, உண்மையாக உழைப்பதில்லை.

ஆண் நடிகர்கள் குடித்து கண்டபடி அலைந்து குட்டிச் சுவராகிறார்கள். நடிகைகளும் ஆண்களோடு போட்டியிட்டு இஷ்டம்போல் அலைந்து கெடுகிறார்கள். பணமும் பவிஷும் சேர்ந்து நடிகர் நடிகைகளை குதிர்களாகவும், பீப்பாய்களாகவும், 'பிரமிட்'களாகவும் பெருத்துப் போகச் செய்கின்றன.

இந்த அவலெட்சணங்கள் காதல் ஆட்டங்கள் வேறு ஆட வந்துவிடுவார்கள் திரையிலே! சில 'பூதங்கள்' நாட்டியம் என்று கையையும் கால்களையும் அசைத்து, மூஞ்சியைச் சுளித்து, கண்களை அறுக்கும் கோரங்களாக ஆடும் போது 'படம் பார்த்தது போதும். வெளியே எழுந்து போகலாம் என்றுதான் தோன்றும்.

புது முகங்கள் வேண்டும், வேண்டும் புதுமுகம் என்கிறார்கள். புதுமுகங்கள் என்று சில உருப்படிகளை அறிமுகம் வேறு செய்கிறார்கள். 'அவள் அக்காள் அலங்கார்' என்று முழிக்கும் பதார்த்தங்கள்தான் புதிதாக வருகிறவர்களும்! இவர்களும் விரைவிலேயே பெரியவர்களோடு போட்டி போடத்துணிகிறார்கள்—பருமனாக வளர்வதிலும். கண்டபடி திரிவதிலும்தான்!

இவர்களிடம் அகப்பட்டுக்கொண்டு திணறும் சினிமாக் கலை எப்படி உருப்படும்!

## 5

இவ்விதம் கோளாறான அடிப்படைகளிலேயே உருவாக்கப்படும் படங்கள் வெற்றிபெறவேண்டும் என்பதற்காக குறுக்குவழி காண முயல்கிற சினிமா பிரம்மாக்கள் மட்ட ரகமான காட்சிகளை ஹாஸ்யத்தின் பெயரால் இணைக்கிறார்கள். இவர்கள் அகராதிப்படி ஹாஸ்யம் என்றால், அசட்டு ஆணை முரட்டுப் பெண் மிரட்டுவது, போட்டியாக ஒரு பித்துக்குளி தலைகாட்டி உதை வாங்கிக்கொண்டு ஓடுவது, புருஷனை பெண்டிடாட்டி அறைவது இத்யாதிகளே!

திரும்பத் திரும்ப இதே பாதையில்தான் நடைபோடும் ஹாஸ்யம் என்கிற கழுத்தறுப்பு! எல்லாப் படங்களிலும் ஒரே ரகம்தான்.

கண்களை உருட்டிப் 'பேந்தப் பேந்த' விழிப்பது வாயை மணிப்பர்ஸ்போல் ஆக்கி இளிப்பது......அசடாக அலைவது.........பேயாடுவது.........ஒப்பாரி வைப்பது—இன்னோரன்ன பிற ஹாஸ்ய நடிப்பின் இலக்கணம்!

ஹாஸ்யத்தோடு நாட்டியம் என்கிற பெயரால் சதை வெளிச்சம்போடும் வீணாத்தனம். இதில் கை தேர்ந்த 'துணிந்த கட்டை'கள் பெருத்து வருகிறார்கள். (உடல் பருமனிலும், எண்ணிக்கையிலும்தான்!)

'மேக்கப்'கலையின் பெயரால், அலங்கோலம் செய்தல். பெண்களின் மார்பிலே தலையணைகளையும், பஞ்சுப் பொட்டலங்களையும் வைத்துக்கட்டி 'மலையோ, குடமோ' என மருளும்படி செய்கிற ஜாலவித்தைதான் 'மேக்கப்' என்று கருதப்படுகிறது இன்றைய படவுலகிலே.

கதை எத்தன்மையதாக இருப்பினும் கவலையில்லை. அவர்கள் புனிதம் என்று கருதுகிற பக்தி அளப்புகள், பக்தர் சரிதைகள், பித்தலாட்டப் புராணங்கள் எதுவே யாயினும் சரிதான். கால வேற்றுமை, இட ஒற்றுமை, முதலியன இருக்கவேண்டுமே என்று படக்கலை நிபுணர்கள் எண்ணுவதேயில்லை.

சிவராத்திரி இரவுகளில் குடிகாரர்கள் பலர் கூடி ஸ்பெஷல் நாடகம் ஆடுவார்கள், இஷ்டம்போல் எப்படி வேண்டுமானாலும் அழகு செய்து கொள்வர். குறி சொல்லும் குறத்தி வேஷக்காரன் ரிஸ்ட் வாட்சையும் ஸ்லிப்பரையும் அணிந்து திரிவான். வள்ளி பாலிஷ் ஸ்லிப்பரும் கோல்டு ரிம் மூக்குக் கண்ணாடியும். கைக் குட்டையும் ஏந்தி அலைவாள். பாடாடோப எமன் கருப்புக் கண்ணாடி போட்டிருப்பான்.

இந்தக் குடிகார ஸ்பெஷல் நாடகபாணிதான் இன்றைய சினிமாவில் நிலவுகிறது! நாடக உலகம் பெரும் பகுதி அப்படியே சினிமா பூமியில் இறக்குமதி செய்யப் பட்டிருக்கும் தோஷம்தான் முக்கிய காரணம்.

# சிறந்த இரண்டு கதைப் புத்தகங்கள் !

## மன்மதனும் மகாலிங்கமும்

ஆசிரியர் : அசோகன்

24 பக்கங்கள் விலை நாலணு

★

## 'மத்தாப்பு சுந்தரி'

ஆசிரியர் ; வல்லிக்கண்ணன்

24 பக்கங்கள் விலை : நாலணு

பதிப்பாளர் :

எம். சூரி

14. A. குப்பையர் தெரு

ஜி. டி. சென்னை

அத்துடன் சிரமப்பட்டு கவனத்தோடும் கவலையோடும் அப்பழுக்கற்ற முறையில் அருமையான சிருஷ்டியாக தங்கள் படத்தைத் தயாரிக்க வேண்டும் என்கிற கலையுணர்ச்சி தமிழ்ப் படவுலகில் ஈடுபட்டுள்ளவர்களிடம் இல்லவே இல்லை எத்திப் பிழைப்பதும், சிரமமின்றி பணம் பிடுங்க வழி அமைப்பதும்தான் இவர்கள் குறிக்கோள்.

ஆகையினாலேதான் திருடும் முதலாளிகளும் அவர்களுக்கேற்ற பூசாரிகளும் பெருத்துவிட்டார்கள்!

தமிழ் நாடக மேடையில் ஏதாவது நாடகம் நல்ல பெயர் பெற்றுவிட்டதா? உடனே கதையை அபேஸ் பண்ணு! படம் தயார் என்று விளம்பரத்தைப் போடு!

நாடக உலகில் எந்த நடிகனாவது புகழ்பெற்று விட்டானா?.........'சரி, பிடித்துப்போடு நம்ம படத்துக்கு!' இதுதான் முதலாளி மனோபாவம்.

கதை எப்படிப்பட்டது? நாடக மேடையில் புகழ் பெற்ற நடிகன் சினிமாவிலும் பிரகாசிப்பானா? அதற்குரிய திறமை, படத்திற்குரிய முகவெட்டு முதலிய அம்சங்கள் அவனிடம் இருக்கின்றனவா?—இவ்விதமாகிய முக்கியப் பிரச்னைகள் ஒதுக்கித் தள்ளப்படுகிற சில்லறை விஷயங்களாகி விடுகின்றன முதலாளிகள் சந்நிதானத்திலே! 'வைத்தால் குடுமி; சிரைத்தால் மொட்டை' என்கிற கணக்கிலே, அவர்கள் குப்பையிலே கிடப்பவர்களை நட்சத்திரமாக்கி விடுவார்கள்; நட்சத்திர பதவிக்கு உயர்கிறவர்களை ஒதுக்கி விடுவார்கள்...அவர்களிடம் பணம் இருப்பதனால் என்ன வேண்டுமானாலும் செய்யலாம், எதையும் எப்படியும் செய்து முடிக்கலாம் என்ற எண்ணம் தடித்துப் போயிருக்கிறது கலைப்பூசாரிகள் உள்ளத்தில்.

ஆகவே, சுலபமாக எத்திப் பிழைக்க எத்தனை குறுக்குப் பாதைகள் உண்டோ அத்தனையும் கையாள்வதில் மட்டும்தான் கவனம் செலுத்துகிறார்கள். மௌஸு பெற்றுவிட்ட கதைகளையும், படம் பார்ப்பவர்களின் அபிமானத்தைப் பெற்றுவிடும் பிரபல நடிகர்களையும் போட்டுப் படம் பிடிக்கத் துடிப்புடன், அவ்வப்போது மக்களின் மதிப்பைப் பெற்று விடுகிற வேறு விஷயங்களையும்— அர்த்தமில்லாமலே— திணித்துவிடத் தயங்குவதில்லை!

இதனால் காந்தி பொம்மைகளும் மூவர்ணக் கொடிகளும், பாரதி பாட்டுகளும் இன்னும் பல எத்து வேலைகளும் தாராள இடம் பெற்று விடுகின்றன படங்களில்.

## 6

சினிமாத் தொழில் ஏன் இந்தச் சீரழிந்த நிலைமையிலேயே இருக்கிறது? இதன் காரணம் இத்துறையில் ஈடுபட்டிருப்பவர்களே.

சினிமா சிறந்த கலை. பலவித சக்திகள், திறமைகளின் கூட்டு மலர்ச்சி. நேர்மையான முறையிலே பயன்படுத்தினால் நல்ல பலன் கிட்டும். அதற்கு உயர்ந்த நோக்கமுள்ளவர்கள் படத்தொழிலை கைக்கொள்ள வேண்டும்.

இன்றுள்ளவர்களில் பெரும்பாலோர் சினிமாவை வெறும் வியாபாரமாக்கி விட்டதால்— லாபம் தரும்தொழிலாகக் கருதுவதால்— கலை வளர வகை செய்யவில்லை, கலையைக் காப்பாற்றி வெற்றிகரமான தொழிலாக அதை வளர்க்க விரும்பாமல் எத்து வேலைகள் செய்து சுலபமாக பிஸினஸ் ஆக்கி விடுகிறார்கள்.

கெட்டலைந்தவர்களும் இஷ்டம்போல் திரிந்து கெட விரும்புகிறவர்களும் அதிகமாக சினிமா உலகில் ஈடுபட்டிருப்பதால், பொதுவாக சினிமாக்காரர்களைப் பற்றி கெட்ட அபிப்பிராயமே எங்கும் பரவியுள்ளது. 'நாடகக்காரர்களா? வெறும் கூத்தாடிப் பசங்க!' என்று அழுத்தமாகப் பதிந்திருந்த எண்ணம் மாறவேயில்லை. அது 'சினிமாக்காரன்கள் தானே!' என்று ஏகத்தாளமாக எண்ண இடம் தந்திருக்கிறது. இந்த நிலையை மாற்றவே எவ்வளவோ திட்டமான வேலைகள் செய்தாகவேண்டும்.

ஆனால் இதைப்பற்றி எண்ணுவதில்லை சினிமாத் தொழிலில் உள்ளவர்கள். பணமும், டம்பாச்சாரி வாழ்வு, வாழ வசதிகளும் கிடைக்கும் வரை வேறு எதைப்பற்றி அவர்கள் கவலைப்படவேண்டும்!

பணம் சுலபமாகத் திரட்ட வேண்டும்; மினுக்கித் திரிந்து சுலபமாகப் பெயரும் புகழும் பெறவேண்டும்; தளுக்குக் காரிகள் (பகட்டுக்காரர்கள்) உறவு வேண்டும்— இப்படி ஏதாவது காரணத்தோடு சினிமாத் துறையில் புகுந்துள்ளவர்களே அதிகம்.

'நல்ல பிஸினஸ்' எண்ணி பணம் போட்டு ஊதாரித்தனமாகச் செலவு செய்துவிட்டு, பிறகு கடன் வாங்கி குப்பைப் படம் தயாரிப்பவர்கள்...வெளிச்சம் போட்டு அலைந்து, இளிச்சவாயர்கள் தரும் பணத்தை முதலாக வைத்து, 'காமா சோமா'வென்று எப்படியாவது படம் பிடித்து, பணம் கொடுத்தவன் தலையில் வைத்துக் கட்டுகிறவர்கள்...படத்தை முழுவதும் பிடிக்க முடியாமல் அந்தரத்திலே விட்டு விடுகிறார்கள்...திட்டமற்றவர்கள், திறமையற்றவர்கள், மேனா மினுக்கிகள், தற்பெருமை டம்பாச்

சாரிகள்—இவ்விதமான கும்பல்கள் நிறைந்துள்ள வரை தமிழ் சினிமா உருப்படவே உருப்படாது.

இத்தகையவர்கள் கலையுலகக் காளான்கள். தமிழ் நாட்டைக் கெடுக்கும் புல்லுருவிகள். கலைக் கறையான்கள். தமிழியத்தை—தமிழர் கலாசாரத்தை—பாழக்கி, தமிழ்நாட்டின் பெயரைக் கெடுக்கின்ற மக்கட் மகடிகள்.

இவர்கள் ஒழிந்தால்தான் சினிமாக்கலை உருப்படும்.

## 7

படிக்காத, பண்பு பொருத, பணக்காரர்களும், நாடகக்காரர்களும் சினிமாத் துறையில் புகுந்து, திட்டமற்று, ஒழுங்கு முறையற்று, இஷ்டம்போல் வாழ்வதனால்தான் சினிமாக் கலைக்கே கெட்ட பெயர் ஏற்பட்டுள்ளது.

இந்நிலை மாற இவர்கள் சீர்திருந்த வேண்டும். அல்லது சினிமாத் தொழிலை விட்டுத் தொலைய வேண்டும்!

அத்துடன், கல்வியறிவுள்ளவர்கள், சிந்தனையாளர்கள், திறமையுள்ள நடிகர்கள், கலைப் பசி கொண்டவர்கள், நல்ல எழுத்தாளர்கள் படவுலகில் பிரவேசிக்க வேண்டும்.

படவுலகைக் கைப்பற்ற இத்தகையவர்களுக்கு பொருளுதவி செய்யக்கூடிய ரசிகர்கள் தேவை. கலாசாலை நாடகங்களிலும் தனிப்பட்ட கழக விழாக்களிலும் கலந்து உற்சாகமாக நடிக்கும் திறமைசாலிகள் நாட்டிலே ஏராளம். கலையார்வத்தால் நடிப்பிலே ஈடுபடத் தயாராக இருப்பவர்கள் எண்ணற்றோர். இத்தகைய மணிகளைத் திரட்டி நல்ல

முறையில் கலையை வளர்க்க பணமுள்ள வள்ளல்கள்தான் தேவை.

கவிஞர் பாரதிதாசன் கூறுவது போல,

'பயன் விளைக்கும் விதத்தினிலே பல செல்வர் கூடி
இடக்க கற்றிச் சுயநலத்தைச் சிறிதேனும் நீக்கி
இதயத்தில் சிறிதேனும் அன்புதனைச் சேர்த்துப்
படமெடுத்தால் செந்தமிழ் நாடென்னும் இளமயிலும்
படமெடுத்தாடும் ; தமிழர் பங்கமெலாம் போமே!'

## 8

இப்போது படமுதலாளிகள் பழியை பொதுமக்கள் மெயரில் போடுகிறார்கள். மக்கள் இவ்விதமான மட்ட ரகமான படங்களையே விரும்புகிறார்கள் என்று சொல்லி மடத்தனமான, கோளாறான படுபாடாவதி படங்களையே நீள நீளமாகப் பிடித்து, படம் பார்ப்பவர்களின் பொறுமையைச் சோதிக்கிறார்கள்.

பொது மக்களில் பெரும்பாலோர் தந்திர ஜாலங்கள், ஸ்டன்டுகள், அரை முக்கால் நிர்வாண நாட்டியங்கள் மலிந்த படங்களை அதிகம் பார்த்து, படமுதலாளிகளின் பணப்பைகளை நிரப்ப ஓடுகிறார்கள் என்பது ஓரளவு உண்மை. இதற்குப் பொறுப்பு படமுதலாளிகளும் சினிமாக் கலையில் ஈடுபட்டிருப்பவர்களுமே யாவர்.

சுலபமாக எத்திப் பிழைத்து பணம் பிடுங்க வேணும் என்ற கீழ்தர ஆசையால் மட்ட ரகமான படங்களையே பிடித்துப் பிடித்து மக்களின் ரசனை உணர்ச்சியை மழுங்க அடித்துள்ளனர் சினிமா முதலாளிகள் என்றே கூற

வேண்டும். இவர்கள் நல்ல முறையில் உயர்ந்த படங்கள் பிடித்துக்கொடுத்து மக்கள் ரசிக்காமல் தட்டிக் கழித்து விட்டார்களா என்ன !

ஆரம்ப காலத்திலாவது இரண்டு மூன்று நல்ல படங்கள் வந்தன. பிறகு கண்கட்டி வித்தைகள் நிறைந்த குப்பைப் படங்களே மலிந்துவிட்டன, 'இரு சகோதரர்கள்' 'மேனகா' 'குமாஸ்தாவின் பெண்' போன்றநல்ல கதைகளை நல்ல படங்களாக ஏன் தயாரிக்கக்கூடாது? கதைகளுக்குப் பஞ்சமா? கதாசிரியர்களுக்குப் பஞ்சமா?

வீணாக பழியை பொதுமக்கள் பெயரில் போட்டுவிட்டு வீணத்தனமான படங்கள் பிடிப்பவர்களைத் திருத்த இனிமேல் ஒரே ஒரு வழிதான் இருக்கிறது.

பத்திரிகைகளை நம்பிப் பயனில்லை. பத்திரிகைகள் படமுதலாளிகளின் தயவை நம்பி வாழ்க்கை நடத்தத் தவிக்கின்றன. அதிலும் காளான்கள் போல, பத்திரிகைகள் முளைத்து வரும் இன்று, விளம்பரங்கள் பெறுவதற்காக முதலாளிகளை மகிழ்விக்க என்ன செய்யவேண்டுமோ, அந்த வகையில்தான் காரியங்கள் சாதிப்பார்கள். உண்மைக்காக உண்மையை துணிந்துகூற விரும்பா சினிமாப் பத்திரிகைகள். ஆகவே, காரசாரமான விமர்சனங்கள் எழுதி, படங்களின் உண்மைத் தன்மையை அம்பலப் படுத்த விரும்புகிற கலா ரசிகர்களுக்கு பத்திரிகைகளில் இடம் கிடைக்காது.

ஆகவே, கலாரசிகர்கள், திறமையைப் பாராட்டி தவறுகளைக் கண்டிக்கும் விருப்பு வெறுப்பற்ற விமர்சகர்கள், கலைஞர்கள் எல்லோரும் தங்கள் எதிர்ப்பை—அங்கும் இங்குமாகச் சிதறிவிடும் எதிர்ப்பை—ஒருமுகப்படுத்த

# சிறந்த சிந்தனைச் செல்வங்கள்

'சாந்தி நிலைய' வெளியீடுகளின் தன்மையே தனி. அத்தனையும் இலக்கியத்தின் புதிய சுவடுகள். சிந்திக்கத் தூண்டுகிற அறிவின் அனல் மூச்சு. நீங்கள் படித்துப் பாதுகாக்க வேண்டிய புத்தகங்கள்.

## வெளி வந்துள்ளவை

| | | ரூ--அ--பை |
|---|---|---|
| 1. | குஞ்சாலாடு (குறுநாவல்) நையாண்டி பாரதி | 1—4—0 |
| 2. | கோயில்களை மூடுங்கள்—கோரநாதன் | 0—6—0 |
| 3. | ஈட்டி முனை ,, | 0—8—0 |
| 4. | ஓடிப்போனவள் கதை—சொக்கலிங்கம் | 0—4—0 |
| 5. | மன்மதனும் மகாலிங்கமும்—அசோகன் | 0—4—0 |
| 6. | அடியுங்கள் சாவுமணி!—மிவாஸ்கி | 0—8—0 |

## வெளிவர வேண்டியவை

இன்னும் எத்தனை எத்தனையோ

—விவரங்களுக்கு—

## சாந்தி நிலையம்

சுபத்ராபாய் மான்ஷன்ஸ்

53 ஜெனரல் பேட்டர்ஸ் ரோடு

மௌண்ட் ரோடு சென்னை 2

வேண்டும். அந்த இயக்கத்திற்கு பொதுஜன ஆதரவு விரைவில் கிட்டும் என்பதில் சந்தேகமில்லை.

படம் பார்க்கிறவர்கள் எல்லோரும் தங்கள் ரசனையை, கலையுணர்ச்சியை இன்னும் இழந்துவிடவில்லை. பகுத்தறிவைப் பலி கொடுத்து விடவில்லை. கலைக் காளான்களும், சுய நலமிகளும், படாடோபவிரும்பிகளும், கல்வியறிவற்றவர்களும் சேர்ந்து தமிழ்க்கலையை உருப்படவிடாமல் செய்து, தமிழ் நாட்டை அந்தகார நிலையமாக ஆக்கி வருவதை— மக்களை மடையர்களாக்க விரும்புவதை— அனுமதிக்கக் கூடாது. சினிமாக்கலையிலே மறுமலர்ச்சி காண வேண்டும்: பொதுமக்களின் எதிர்ப்புதான் முதலாளிகளின் குருட்டுத்தனத்தை ஒட்ட முடியும்.

நல்ல படங்கள் வேண்டும்; நல்ல படங்களை உற்பத்தி செய்யுங்கள்— என்று ஒரு சிலர் பேசுவதாலோ, எழுதி விடுவதனாலோ எதுவும் விளைந்துவிடாது என்பதைக் காலம் காட்டி வருகிறது.

படம் பார்க்கிறவர்கள் எல்லாப் படங்களையும் பார்ப்பது... பார்த்துவிட்டு 'நன்றாக இல்லை... பாடாவதிப்படம்' என்று ஏசி விட்டு, மறுபடியும் பாடாவதிப்படங்களைத் தேடிப் போவது என்ற வழக்கத்தை விட்டு விட்டு, பாடாவதிப் படங்களை பகிஷ்கரிக்க வேண்டும்.

மக்கள்களை முட்டாள்கள் எனமதித்து மடத்தனமான படங்களைப் பிடித்துத் தள்ளும் பணமூட்டைகளுக்கு, அவர்கள் படங்களைப் பாராமல், பணவசூலற்றுப் போகும்படிசெய்து வீணர்களுக்குப் புத்தி கற்பிக்க வேண்டும்.

என்று மககள அதறகு தயாராகிறார்களோ, என்று படுப்பாடாவதிப் படங்கள், பம்மாத்து வேலைகள் வெற்றி

கரமான பிஸினஸாக முடியாது தமிழ் நாட்டிலே என்று பணமூட்டைகளுக்கு நாட்டுமக்கள் புரியும் பாஷையில் நிகழ்த்திக் காட்டுகிறார்களோ, அன்றுதான் படமுதலாளி கள் தேய்ந்துபோன பழஞ்சுவட்டை விட்டு வேறு பாதைக்குத் திரும்ப எண்ணுவார்கள்.

இல்லையெனில், மீண்டும் மீண்டும் கிருஷ்ணலீலைகளும், நாரத லீலைகளும், பவளக்கொடிகளும், பாமாவிஜயங் களும்தான் வரும். இன்னும் சில வருஷங்களுக்குப் பிறகு இந்தக் குப்பைக் கதைகள் வர்ண ஜாலங்களுடன் வெள்ளித் திரையிலே துள்ளவரும்.

இந்த இழிநிலை சப்பாத்திப் புதர்போல் வளராது தடுக்க நாட்டு மக்கள் தான் முயற்சி செய்ய வேண்டும். மக்களை சிந்திக்கும்படி தூண்டி, சிந்தித்து உண்மையை உணர்ந்து எதிர்ப்பு உணர்ச்சியை செயலில் காட்டும்படி செய்ய, தனி இயக்கமே தேவை.

இந்த இயக்கம் திட்டங்கள் வகுத்து, ஒழுங்கான முறையில் பிரசாரம் செய்து, கலை உணர்வைப் பரப்ப வேண்டும். ரசனையை வளர்க்க வேண்டும். போலித்தன்மை யையும், காளான் குணத்தையும், புல்லுருவிப் பண்பையும், இழிதகைமைகளையும் ஒழிக்க வேண்டும்.

இந்தவிதமான எதிர்ப்பு முன்னணி ஏற்பட்டால் தான், எதிர்ப்பு இயக்க பூர்வமாக வளர்ந்தால்தான், பட முதலாளிகளும் கலை நிபுணர்களும் மனம் மாறி, நல்லது செய்ய முற்படுவார்கள். இவ்வளவு தீவிர சக்தியாக எதிர்ப்பு வளராத வரை, பட முதலாளிகள் திருந்தப்போவ தில்லை.

தமிழ் சினிமாக்கலையும் உருப்படப் போவதில்லை!

PRINTED AT JOTHI PRESS, TRIPLICANE HIGH ROAD, MADRAS-5 FOR
Q. H. M. S. NO. 389. COPIES 1000-'48.

சுவாரஸ்யமான ரஷ்யக் காதற் கதை

# 'அன்று இரவில்'

தமிழாக்கம்: அசோகன்

88 பக்கங்கள் கொண்ட அழகிய பதிப்பு விலை ரூபாய் ஒன்று. ரூ. 1—2—0 மணியார்டர் அனுப்பினால் ரிஜிஸ்தர் தபாலில் அனுப்பிவைக்கப்படும் வியாபாரிகளுக்கு 25/ கமிஷன் தரப்படும்.

உரிமையாளர்:
எம். சூரி
14--A, குப்பையர் தெரு
மின்ட் பில்டிங்ஸ் போஸ்டு ஜி. டி. சென்னை

---

நூதன சக்தி!

தாதுபுஷ்டி வேண்டுமா?

அப்படியானால்

# மன்மத குளிகை

உபயோகியுங்கள்

உபயோகித்த தினமே உற்சாகமடைவீர்கள்
60 குளிகை விலை ரூ. 6—0—0

மலையப்பசாமி வைத்தியசாலை,
பழனி S. I.